# வானவில்

VAANAVIL
ISSUE – 18 JUNE 2012

இதழ் - 18 ஆனி 2012


# சகல இனவாதப் போக்குகளையும் அரசாங்கம் உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்!

புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான 30 வருட இனவாத யுத்தம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் முடிவுக்கு வந்தபோது, அந்த இறுதி யுத்தத்தால் ஏற்பட்ட மரண அவஸ்தையையும் தாங்கிக்கொண்டு மக்கள் ஓரளவு நிம்மதி மூச்சுவிட்டனர். அதற்கொரு காரணம் இருந்தது. அதாவது இனி யுத்தம் இல்லை, அதுமாத்திரமின்றி இனப்பிரச்சினைக்கும் ஒரு நீதியான தீர்வு கிடைக்கும் என்றவாறாக மக்களின் எண்ணங்கள் இருந்தன.

யுத்தம் முடிவுற்ற நேரத்தில் தமிழ் மக்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு (புலிகளையும்தான்) இருந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பு இனி என்ன செய்யப் போகின்றது என கேள்வியும் மக்களிடம் இருந்தது. புலிகள் வழங்கிய பிராணவாயுவினால் உயிர்வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு புலிகள் போய்விட்டதனால் இனி எதிர்காலம் இல்லையென்று மக்கள் கருதியதே அதற்குக் காரணமாகும்.

இறுதி யுத்த நேரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் – குறிப்பாக சிவாஜிலிங்கம், ஜெயானந்தமூர்த்தி, அரியநேத்திரன், பத்மினி சிதம்பரநாதன் போன்றோர் வெளிநாடுகளில் தங்கியிருந்து அரசுக்கு எதிரான தீவிர பிரச்சாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் சிவாஜிலிங்கம் போன்றோர் சுமார் ஒரு வருடமாக இந்தியாவில் தங்கிநின்று சில திராவிடப் பிழைப்புவாதக் கட்சிகளுடனும், இந்தத்துவ வலதுசாரிக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியுடனும் கைகோர்த்து இலங்கை அரசுக்கு எதிரான கடுமையான எதிர்ப்பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

உள்நாட்டில் இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட புலிகளின் அனுமதியில்லாதபடியால் தமிழ் பகுதிகளுக்குச் சென்றுவர முடியாத நிலையிருந்தபடியால், விலாங்குகள் போல புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் தலையையும் வாலையும் காட்டிக்கொண்டு கொழும்பில் முடங்கிக் கிடந்தனர். புலிகள் அழிந்து யுத்தமும் முடிந்துவிட்டதால் இவர்கள் இனிமேல் எந்த முகத்தோடு தமிழ்ப் பகுதிகளில் கால் வைக்கப்போகின்றார்கள் என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் இருந்தது.



1983 இனவன்செயலை நினைவூட்டும் காட்சி

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# காணி சுவீகரிப்பு

**வ**டபகுதியில் இலங்கை இராணுவத்தினரின் காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டம் அண்மையில் பலரது கவனத்தையீர்த்துள்ளது. வலிகாமம் வடக்கில் காங்கேசன்துறை மற்றும் பலாலியை சுற்றியுள்ள பல கிராமங்களில் மக்கள் மீளக்குடியேறுவதற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு மீளக்குடியேறுவதற்கு அனுமதிக்கப்படாத மக்களில் ஒரு பகுதியினரை முன்னிறுத்தியே தமிழ் அரசியல்வாதிகளால் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் தனியார் காணிகளை, குடியிருப்புகளை அபகரிக்கிறார்கள் என்பதோடு நிறுத்தாது, வழமைபோலவே தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் மக்களின் சொத்துக்களை பௌத்தகுருமாரும் சிங்களவர்களும் சேர்ந்து அபகரிக்கிறார்கள் என்ற பாணியிலே பேசியும் அறிக்கைகளை விட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். அத்தோடு இலங்கை இராணுவத்தினர் தனியார் காணிகள் மற்றும் குடியிருப்புகளிலிருந்து வெளியேற வேண்டுமென்று கோரி சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்வோமென மிரட்டல்களும் விடுத்துளார்கள்

யாழ் குடாநாட்டில் இராணுவத்தின் இன்றைய நிலையரங்குகளை விளங்கிக்கொள்வதற்கு வரலாற்றை கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். இலங்கை இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் கடுமையான யுத்தம் மூளுவதற்கு முன்னர் யாழ் குடாநாட்டில் ஏறத்தாள 12 இலட்சம் மக்கள் மிகவும் நெருக்கமாகவும் செறிவாகவுமே வாழ்ந்தார்கள். அப்போது சில ஆயிரக்கணக்கான இராணுவத்தினரே யாழ் குடாநாட்டில் இருந்தார்கள். இராணுவத்தினர் விரும்பியிருந்தால் கூட சுவீகரிப்பதற்கு, யாழ் குடாநாட்டில் மக்களற்ற தனியார் குடியிருப்புகளென அப்போது எதுவுமே இருக்கவில்லை. 1983 ஆண்டிலிருந்து 2009 ஆண்டுவரையான காலப்பகுதியில் இலங்கை இராணுவத்துக்கு புலிகளை எதிர்கொள்வதற்கு பலமடங்கு பலம் தேவைப்பட்டது. இதனால் இராணுவத்தினரின் எண்ணிக்கை ஏறத்தாள நாற்பதினாயிரமாக உயர்ந்தது. ஆனால் இவ்வளவு தொகையான இராணுவம் முகாமிட்டிருப்பதற்கு பலாலி, காரைநகர், யாழ் கோட்டை முகாம்கள் போதுமானதாக இருக்கவில்லை. இதனால்தான் வெறுமையாகக்கிடந்த காணிகளை, குடியிருப்பாளர்கள் இல்லாத ஆயிரக்கணக்கான வீடுகளை இராணுவம் பயன்படுத்தத் தொடங்கியது.

யுத்தகாலப்பகுதியில் குறைந்தது 5 இலட்சம் மக்களாவது யாழ் குடாநாட்டைவிட்டு வெளியேறியிருப்பார்கள். பெருமளவிலான மக்கள் வெளியேறியதாலும், யுத்தம் காரணமாகவும் யாழ் குடாநாட்டில் இயல்பான சனத்தொகைப் பெருக்கமும் நிகழவில்லை. இதனால் தற்போது யாழ்ப்பாணம் நகரத்தை அண்டியுள்ள பகுதிகளை தவிர, யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில், 25வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில், மக்களின் பிரசன்னம் மிகவும் குறைந்தே காணப்படுகிறது. 10 வருடங்களுக்கு முன்னர் மீளக்குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில், பல ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருப்புகள் இன்னமும் திருத்தப்படாமல் தூர்ந்த நிலையிலேயே உள்ளன. திருத்தப்படாத பெரும்பாலான இந்த மக்கள் குடியிருப்புகளின் உரிமையாளர்கள் இலங்கையைவிட்டு நிரந்தரமாக வெளியேறிவிட்டார்கள் என்பதே இதற்கு காரணம். உரிமையாளர்களால் மீளளிக்குமாறு கோரப்படாத, இத்தகைய தனியார் குடியிருப்புகளிலே இராணுவமும் இன்னமும் நிலை கொண்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் யுத்தம் முடிந்து 3 வருடங்கள் முடிவுற்றநிலையில் போர்க்குற்றங்களுக்கும், பல சர்வதேச அழுத்தங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ள இலங்கை அரசு, அவ்வப்போது தமிழ் அரசியல்வாதிகளால் தூண்டிவிடப்படுகின்ற இவ்வாறான போராட்டங்களுக்கும் முகம் கொடுக்க வேணடியுள்ளது. புலி இயக்கம் மீண்டும் உருவாகலாமென கூறியும் வேறு பல பாதுகாப்பு காரணங்களைக் காட்டியும், நீண்டகாலம் மக்கள் குடியிருந்த பகுதிகளில் இராணுவம் நிலை கொள்ளமுடியாது. புலி போன்றதோர் இயக்கம் மீண்டும் உருவாகலாமிருக்க, இனப்பிரச்சனை முளைவிடுவதற்கு காரணமாக அமைந்த அரசியல் பிரச்சனைக்கு தீர்வு காண்பதே, இராணுவத்தை பெருமளவில் நிலைகொள்ள செய்வதை விடவும் பாதுகாப்பானது. குறிப்பாக யாழ் குடாநாட்டில் படிப்படியாக 1983 ஆண்டிற்கு முன்னர் இருந்த நிலையரங்குகளுக்கு இராணுவம் செல்லவதைத் தவிர வேறு வழியில்லை. முழு இலங்கையையும் பொறுத்தவரையில், பலாலி இராணுவமுகாம் என்பது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதால், பலாலியை சுற்றியுள்ள கிராமங்களை இராணுவம் ஒருபோதும் மீளக்கையளிக்காது என்ற கருத்தே நிலவுகின்றது. ஆனால் அந்த கிராமங்களில் காலங்காலமாக வாழ்ந்த பெருமளவிலான மக்கள் மீளக்குடியமர விரும்பினால், அவற்றினையும் மீளக்கையளிக்க இலங்கை இராணுவம் முன்வர வேண்டும். *

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# இது தவறானது!



'தந்தையும் மைந்தரும்' என்ற தலைப்பில் 'தமிழரசுக் கட்சி அரசியலின் விமர்சனம்' என்ற உப தலைப்புடன் கூடிய சிறு பிரசுரம் ஒன்று, இமயவரம்பன் என்பவரால் எழுதப்பட்டு, 2000ம் ஆண்டில் புதிய பூமி வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பிரசுரத்தில் சில விடயங்கள் முற்றுமுழுதாகத் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை அதை வாசித்த போது அவதானிக்க முடிந்தது.

உதாரணமாக, பிரசுரத்தின் 60 – 61ம் பக்கங்களில் பின்வருமாறு ஒரு விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது: "...இதனாலேயே வடக்கில் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் முக்கியஸ்தரான வி.பொன்னம்பலத்திற்கு ஆதரவு தருவது பற்றி இடதுசாரிகள் மத்தியில் மிகுந்த கருத்து வேறுபாடுகள் நிலவின. சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலைப் பகிஸ்கரிக்குமாறு மக்களைக் கோரியது. 1972ல் சண்முகதாசனை எதிர்த்துப் பிரிந்தவர்கள் நடுவிலும் வட பிரதேசத்தில் இருந்தோர் வி.பொன்னம்பலத்தை ஆதரிக்க மறுத்தனர். கொழும்பிலும் தெற்கிலும் இருந்தோர் சிலர் தமிழர் ஐக்கிய முன்னணியை எதிர்த்தும் பிரிவினையை எதிர்த்தும் வாக்களிப்பது சரி என வாதித்தனர். எனினும் வடக்கில் மாக்ஸிய – லெனினியவாதிகள் எவருமே வி.பொன்னம்பலத்தை ஆதரிக்கவில்லை என்பது முக்கியமானது"

இந்த வார்த்தைகள், 1970 பொதுத்தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் வெற்றியீட்டிய தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், 1972ல் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய குடியரசு அரசியல் யாப்பை அறிமுகம் செய்த பின்னர், அதை நிராகரித்து தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து, இடைத்தேர்தலை தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதுவதாக அறிவித்த பின்னர், அத்தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தல் பற்றியே குறிப்பிடுகின்றது.

1970ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சியின் பெரும் தலைகளான அ.அமிர்தலிங்கம், ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் ஆகியோரும், தமிழ் காங்கிரசின் தலைவர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், மு.சிவசிதம்பரம் ஆகியோரும் தோல்வியடைந்த பின்னர், அதுவரை கீரியும் பாம்புமாக இருந்து வந்த தமிழரசு – காங்கிரஸ் கட்சிகள், இன்னும் சில உதிரிக்கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை (TULF) உருவாக்கிய பின்னணியிலேயே நடைபெற்றது. எனவே, இந்த இடைத்தேர்தலில் சகல தமிழ் முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளும் செல்வநாயகத்தின் பின்னால் அணிதிரண்டு நின்றன.

இத்தேர்தலில் செல்வநாயகத்துக்கு எதிராக, அத்தொகுதியில் 1970 பொதுத்தேர்தலில் போட்டியிட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் வி.பொன்னம்பலம் முற்போக்கு சக்திகளின் சார்பில் போட்டியிட்டார். உண்மையில் அன்றைய காலகட்டத்தில், இத்தேர்தல் சாராம்சத்தில் தமிழ் முற்போக்கு சக்திகளுக்கும் பிற்போக்கு சக்திகளுக்கும் இடையிலான ஒரு பலப்பரீட்சையாகவே இருந்தது.

இதற்கிடையில் கம்யூனிஸ்ட் கட்சியின் இன்னொரு பிரிவான சீனசார்பு அணியில், அதன் பொதுச்செயலாளர் நா.சண்முகதாசனின் தவறான போக்கிற்கு எதிரான உள்கட்சிப் போராட்டம் உச்ச நிலையை அடைந்து, அதிலிருந்த மார்க்சிச – லெனினிசவாதிகள் சண்முகதாசனை கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்தும் நீக்கிவிட்டு, கட்சியின் பெயரை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) என மாற்றம் செய்திருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில், காங்கேசன்துறை இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட போது, வழமைபோல சண்முகதாசனின் கட்சி தேர்தலைப் பகிஸ்கரிப்பதாக அறிவித்தது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி (மா – லெ) இடைத்தேர்தலில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வி.பொன்னம்பலத்தை ஆதரிப்பதாக பகிரங்கமாக அறிவித்தது. அதற்கான காரணங்களையும் அறிவித்தது. அவையாவன: அரசியல் ரீதியாக தமிழ் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பிரிவினைவாதத்தை எதிர்ப்பதற்காகவும், கடந்த காலத்தில் சண்முகதாசன் தலைமையில் கட்சி பின்பற்றிய இடதுசாரி ஐக்கியத்துக்கு எதிரான ஒருமுனைவாதத் தவறைச் சீர்செய்வதற்காகவும், இந்த முடிவை எடுப்பதாக கட்சி அறிவித்தது.

இடைத்தேர்தலில் மார்க்சிச — லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் வட பகுதி முக்கிய தலைவர்களான, தோழர்கள் மு.கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி, மு.குமாரசாமி போன்றோரும் ஏனைய தோழர்களும் வி.பொன்னம்பலத்துக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்ததுடன், கட்சியின் முதுபெரும் தோழரும், 1965ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் அத்தொகுதியில் எமது கட்சியின் சார்பாகப் போட்டியிட்டவரும், (அத்தேர்தலில் மொஸ்கோ சார்பு கட்சியின் சார்பாக பி.வைகுந்தவாசன் போட்டியிட்டிருந்தார்) காங்கேசன்துறை பட்டினசபையின் முன்னாள் தலைவருமான தோழர் டாக்டர் சு.வே.சீனிவாசகம், வி.பொன்னம்பலத்தின் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்குபற்றி உரையும் நிகழ்த்தினார்.

இந்தத் தேர்தலில் செல்வநாயகத்தின் வெற்றி ஏற்கெனவே உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று. அதற்கான முதலாவது காரணம், ஏற்கெனவே அது அவர் வெற்றிபெற்றிருந்த தொகுதி. இரண்டாவது காரணம், தமிழ் பிற்போக்குக் கட்சிகள் எல்லாம் ஓரணியில் அணி வகுத்திருந்தன. மூன்றாவது காரணம், சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் 1972ல் கொண்டு வந்த புதிய குடியரசு அரசியல் யாப்புக்கு எதிராகத் தமிழ் பிற்போக்கு சக்திகளால் பல சட்ட மறுப்புப் போராட்டங்கள் நடாத்தப்பட்டு, தமிழ் மக்கள் மனங்களில் இனவாதத் தீ முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மூட்டிவிடப்பட்டிருந்தது. அத்துடன், அத்தொகுதியில் 1970ம் ஆண்டுத் தேர்தலில் செல்வநாயகத்துக்கு எதிராகச் சுயேட்சையாகப் போட்டியிட்டு 5788 வாக்குகள் பெற்ற முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கமும், தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 3051 வாக்ககள் பெற்ற ரி.திருநாவுக்கரசுவும் இடைத்தேர்தலில் போட்டியிடாமல் செல்வநாயகத்துக்கு ஆதரவு வழங்கினர்.

1970 பொதுத்தேர்தலில் செல்வநாயகம் பெற்ற மொத்த வாக்குகள் 13520 ஆகும். வி.பொன்னம்பலம் பெற்ற வாக்குகள் 8164 ஆகும். பொன்னம்பலத்துடன் செல்வநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்ட மற்றைய இருவரும் சேர்ந்து மூவரும் பெற்ற மொத்த வாக்குகள் 17003 ஆகும். அதாவது செல்வநாயகம் பெற்றதை விட, மற்றையவர்கள் மூவரும் சேர்ந்து 3483 வாக்குகள் கூடுதலாகப் பெற்றுள்ளனர்!

வி.பொன்னம்பலம் இடைத்தேர்தலில் வெற்றிபெறமாட்டார் என்று நன்கு தெரிந்திருந்த போதிலும், தமிழ் பிற்போக்கு சக்திகளின் நாசகார பிரிவினைவாத அரசியலுக்கு எதிரான சரியான கொள்கையின் பிரதிநிதியாகவே அவரை முற்போக்கு சக்திகள் அத்தேர்தலில் நிறுத்தியிருந்தன. அதன் காரணமாகவே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மா — லெ) அந்த அவரை ஆதரிக்க முன் வந்தது. அதில் ஓரளவு பலனும் கண்டது. 1970 பொதுத்தேர்தலில் 8164 வாக்குகள் பெற்ற வி.பொன்னம்பலம், இடைத்தேர்தலில் 9457 வாக்குகள் பெற்றார். அதாவது 1293 வாக்குகள் கூடுதலாகப் பெற்றார். இந்தக் கூடுதல் வாக்கின் கணிசமான பகுதிக்கு மார்க்சிச — லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி உரிமை கோர முடியும். ஏனெனில் அக்கட்சியின் வட பிரதேச முக்கிய தலைவர்களில் ஒருவரான தோழர் டாக்டர் சு.வே.சீனிவாசகம் அவர்களுக்கு அத்தொகுததியில் இருந்த மக்கள் செல்வாக்கு அந்த வாக்கு அதிகரிப்பை ஈட்டிக் கொடுத்தது.

நிலைமை இவ்வாறு இருக்க, இந்த இடைத்தேர்தலில் மார்க்சிச — லெனினிச கட்சியைச் சேர்ந்தவர்கள் எவருமே வி.பொன்னம்பலத்துக்கு ஆதரவளிக்கவில்லை என இமயவரம்பன் கூறுவது முற்றுமுழுதாகத் தவறானதாகும். இதில் முக்கியமான விடயமென்னவெனில், பலரும் கூறுவது போல பேராசிரியர் சி.சிவசேகரம் தான் இமயவரம்பன் என்ற பெயரில் இந்தக் கட்டுரையை எழுதியிருப்பாராக இருப்பின், அது இன்னும் பாரதூரமானதாகும். ஏனெனில், இந்த இடைத்தேர்தல் நடைபெற்ற காலகட்டத்தில், இந்த இடைத்தேர்தலில் வி.பொன்னம்பலத்தை ஆதரித்த மார்க்சிச — லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவராக சிவசேகரம் இருந்தார். அப்படியிருக்க வி.பொன்னம்பலத்தை இடைத்தேர்தலில் ஆதரிப்பது என்று கட்சி எடுத்த முடிவை அவர் எவ்வாறு அறியாமல் விட்டார்?

மேலும், இந்த இடைத்தேர்தலில், "...கொழும்பிலும் தெற்கிலும் இருந்தோர் சிலர் தமிழர் ஐக்கிய முன்னணியை எதிர்த்தும் பிரிவினையை எதிர்த்தும் வாக்களிப்பது சரியென வாதித்தனர்" எனக் குறிப்பிடுகிறார். அவர் அவ்வாறு யாரைக் குறிப்பிடுகிறார்? மார்க்சிச — லெனினிசக் கட்சியில் இருந்தவர்களையா? இதில் இமயவரம்பன் அந்த நேரத்தில் என்ன நிலைப்பாடு எடுத்தார்? அல்லது வரலாற்றைப் பிற்காலத்தில் திரித்து எழுதுவதற்காக எந்தவொரு நிலைப்பாடும் எடுக்காமல் இருந்தாரா?

இமையவரம்பனின் இந்தப் பிரசுரத்தில் இன்னும் பல வரலாற்றுத் தவறுகளும், அரசியல் குளறுபடிகளும் உள்ளன. உதாரணமாக, 1975ல் பேராசிரியர் க.கைலாசபதி போன்றவர்களின் முன்முயற்சிகளினாலும், வழிகாட்டலினாலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்து நடாத்திய தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டைப் பற்றி மிகவும் தவறானதும், விசமத்தனமானதுமான கருத்துகள் கூறப்பட்டுள்ளன. அந்த மாநாட்டைக் குழப்ப

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

அண்மையில் பௌத்தர்களின் புனித பிரதேசம் என வர்ணிக்கப்படும் தம்புள்ளை நகரில் பல்லாண்டுகளாக இயங்கி வந்த முஸ்லீம் மக்களின் பள்ளிவாசல் ஒன்று அப்பிரதேச பௌத்த குருமார்கள் சிலரால் தாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அப்பள்ளிவாசலை அப்பகுதியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்துள்ளனர். இந்த அநாகரிகச் செயல் இலங்கை முஸ்லீம்களை மட்டுமின்றி, வேறு பல நாடுகளில் வாழுகின்ற முஸ்லீம் மக்களையும், ஜனநாயக எண்ணம் கொண்ட பலரையும் கவலையும் கோபமும் கொள்ள வைத்துள்ளது.




# தம்புள்ளை சம்பவத்தின் அரசியல் பின்னணி என்ன?

அகிம்சா மூர்த்தியான கௌதம புத்தர், மக்கள் மத்தியில் ஜனநாயக உணர்வையும், சமாதானத்தையும், சகிப்புத் தன்மையையும், ஒற்றுமையையும் போதித்தவர். அப்படியானவரின் போதனைகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகச் சொல்லும் பௌத்த மத குருமார்கள், இவ்வாறானதொரு களங்கமான செயலில் ஈடுபட்டது ஏற்கத்தக்கது அல்ல. அவர்களுடைய செய்கை முழு பௌத்த மக்களையும் தலைகுனிய வைக்கும் செயலாகும்.

அந்தப் பிரதேசத்திலுள்ள முஸ்லீம் மக்கள் தமது வழிபாட்டுக்காக அமைத்த பள்ளிவாசலால், அந்தப் பகுதியிலுள்ள பௌத்த மக்களுக்கு தீங்கு ஏதும் நேர்ந்ததாக இதுவரை எந்தத் தகவலும் இல்லை. அப்படியிருக்க ஏன் இந்த அராஜக நடவடிக்கை? இலங்கையில் சிங்கள மக்களே பெரும்பான்மையினர் (ஏறத்தாழ 72 வீதம்). பௌத்த மதமே தலையாய மதம். அப்படியான ஒரு நிலையில், புத்தபிரானின் போதனைகளின் பிரகாரம் பெரும்பான்மையான மதத்தவர்களான பௌத்தர்கள் அங்குள்ள சிறுபான்மை இனங்களையும், மதங்களையும் சேர்ந்தவர்களை அணைத்தல்லவா செல்ல வேண்டும். அதைவிடுத்து அவர்கள் மீது விரோதம் பாராட்டுவது பௌத்த தர்மத்துக்கே விரோதமானது அல்லவா?

ஏற்கெனவே பௌத்தம்தான் இலங்கையின் முதன்மை மதம் என்று அரசியல் சாசனத்திலேயே எழுதப்பட்டுள்ளது. அதுவே மதச் சார்பின்மைக்கு எதிரான ஒரு செயலாகும். இருந்தாலும் அரசியல் சாசனம் குறிப்பிடுவது போலப் பார்த்தால், இலங்கை முழுவதுமே பௌத்த புனிதப் பிரதேசமாகும். அப்படியிருக்கையில் ஒவ்வொரு பிரதேசத்தையும் வேறு தனியாகப் பிரித்து, அவற்றையும் புனிதப் பிரதேசங்கள் என அறிவித்து, அந்தப் பகுதிகளில் வேறு மதத்தவர்கள் சமய நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என, 'சண்டித்தனம்' செய்வது ஆரோக்கியமான போக்கு அல்ல. ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் இன்னொரு மதத்தினரின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தால் அல்லது மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அதில் நியாயம் பேசுவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் இடமுண்டு. அப்படியில்லாமல் செய்யும் செயற்பாடுகள் எல்லாமே மதவெறி சார்ந்தவையாகும்.

தம்புள்ளை சம்பவம் முதலும் முடிவுமல்ல. எமது 'வானவில்' இதழுக்குக் கிடைத்த நம்பத்தகுந்த தகவல்களின்படி, கடந்த சில வருடங்களில் இலங்கையின் பல பாகங்களிலும் ஏறத்தாழ 15 பள்ளிவாசல்களும், சுமார் 60 வரையிலான கிறிஸ்தவ தேவாலயங்களும் அம்மதங்களுக்கு விரோதமானவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன. இந்த அளவுக்கு இந்துக் கோவில்கள் சேதமாக்கப்படவில்லை என்றாலும், சில இடங்களில் அவையும் தாக்கப்பட்டுள்ளன. அண்மையில் திரிகோணமலை வைத்தியசாலையில் நிறுவப்பட்டிருந்த பிள்ளையார் கோவில் தாக்கப்பட்ட சம்பவம் அவற்றில் ஒன்று.

சிறுபான்மை மதத்தவரின் வழிபாட்டிடங்கள் தாக்கப்படுவது தற்செயலானதோ அல்லது வெறும் மதவெறி சார்ந்ததோ என்றுமட்டும் கருத இயலாது. இச்செயல்கள் திட்டமிட்ட முறையில் செயற்படுத்தப்படுவதுடன், அவற்றில் வெளிநாட்டு சக்திகளின் கரங்களும் இருப்பதாக, கொழும்பிலுள்ள சில விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. எந்த சக்திகள் கடந்த 30 வருடங்களாக இலங்கையில் ஒரு உள்நாட்டுப் போரை ஊக்குவித்து அதன் மூலம் லாபம்

சம்பாதித்து வந்தனவோ, அவைதான் தற்போதைய மத முரண்பாடுகளின் பின்னணியிலும் செயற்படுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இலங்கையில் போர் முடிவுற்றதையோ, இலங்கை அதன் பின்னர் தேசிய ஐக்கியத்தை உருவாக்கி வளர்ச்சிப்பாதையில் செல்வதையோ சீரணிக்க முடியாத சில வெளிநாட்டு சக்திகளே, இந்த மதவெறிச் சக்திகளை ஊக்குவிப்பதாகச் சொல்லப்படுகிறது. இலங்கையில் ஸ்திரத்தன்மை ஏற்படாமல் செய்து குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதே அவர்களது நோக்கம் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்காக அவர்கள் வெளிப்படையாகவே பல்வேறு மதவெறிச் சக்திகளுக்கு 'ஊக்கம்' அளிப்பதுடன், அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்காக, அரசாங்கத்துக்குள்ளும் எதிர்க்கட்சி அணிகளிலும் சில சக்திகளைத் தயார் செய்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

எனவே, அரசாங்கம் தான் இந்த விடயத்தில் தலையிட்டால் பலம் வாய்ந்த சக்திகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிவரும் என வாளாவிருக்காமல், இத்தகைய சக்திகளை இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இல்லாவிடின் இவர்களுடைய நடவடிக்கைகள் புற்றுநோய் பரவி, முழு நாட்டையுமே அரித்துத் தின்றுவிடும். இந்த விடயத்தில் பொதுமக்களும் மிக விழிப்பாக இருப்பது அவசியம். இனம், மதம், மொழி, சாதி, பிரதேசம் சம்பந்தமான முரண்பாடுகளைக் கிளறுபவர்கள் சம்பந்தமாகப் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். பொது மக்களை விழிப்புறுத்தும் வகையில் சமூக அக்கறையுள்ள ஸ்தாபனங்கள் முன்கையெடுத்துச் செயற்பட முன்வர வேண்டும்.

30 வருட இனவாதப் போர் போதும். அதை மீண்டும் மதவாதப் போர்வையில் தொடர ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. *

# இந்திய – இலங்கைக் கடற்பகுதியில் தம்மை மூன்றாவது கடற்படையாக அங்கீகரிக்கக் கோரினார் புலிகள்!

வடக்கும் கிழக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலகட்டத்தில் வட கிழக்குப் பகுதியைத் 'தமிழீழத்தின் கடற்பகுதி'யாகப் புலிகள் அறிவித்திருந்தனர். புலிகளுக்குச் சொந்தமல்லாத எந்த ஒரு படகும் 'இராணுவத் தாக்குதலுக்கான இலக்கு' என்றே குறிப்பிட்டனர். அந்தக் காலகட்டத்தில் புலிகளின் கடற்பிரிவான கடற்புலிகள் மிகவும் சக்திவாய்ந்த படையணியாக வலம் வந்தனர். மன்னார் தீவு, யாழ்ப்பாணத்திலிருந்து தள்ளியிருந்த சில தீவுப்பகுதிகளைத் தவிர, பாக் நீரிணையை ஒட்டி மீதமிருந்த இலங்கைக் கடற்பகுதி முழுவதும் கடற்புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. அவர்கள் பயிற்சி முகாம் நடத்திவந்த நாச்சிக்குடா வரை இதற்குள் அடக்கம்.

இதையடுத்து புலிகள் கடற்படைக்கான அந்தஸ்தைக் கோரினார்கள். புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு 'அருகிலுள்ள கடற்பகுதியின் வளங்கள் மீதான கட்டுப்பாடு, அவற்றை முறைப்படுத்தும்' அதிகாரத்தையும் கோருவதாகக் குறிப்பிட்டிருந்தது. இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகராக இருக்கும் எம்.கே.நாராயணன், கடற்புலிகளைப் பற்றி அதிகம் தெரியாத ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். இந்தியா-இலங்கை ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளின் போது, 'இந்தியக் கடற்கரையை ஒட்டியுள்ள பிரதேசங்களைத் தங்கள் பாதுகாப்பின் கீழ் எந்தக் கட்டுப்பாடுமின்றி' தர வேண்டுமென்று புலிகள் கோரினார்கள். புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கடற்பகுதியையும் இலங்கைக் கடற்படையின் கீழ் இருக்கும் கடற்பகுதியையும் பிரித்துக்காட்ட 'துல்லியமான கடல் எல்லைகளை' வகுக்க வேண்டும் என்றும் கோரினார்கள்.

பாக்கு நீரிணை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, தமிழக மீனவர்களுக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நான்கு மோதல்கள் நடந்திருக்கின்றன. 2002 செப்டம்பர் 18ஆந் தேதி பேசாலையைச் சேர்ந்த மீனவர்கள் 105 இந்திய மீனவர்களையும் 25 மீன்பிடிப் படகுகளையும் பிடித்து வைத்துக் கொண்டார்கள். 2003 ஜனவரி 1ஆந் தேதி யாழ்ப்பாணம் மீனவர்கள் பூநகரி அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 36 இந்திய மீனவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். 2003 டிசம்பர் 1ஆந் தேதி 32 இந்திய மீனவர்களையும் எட்டு ட்ராலர்களையும் மன்னாருக்கு அருகில் உள்ள விடத்தல்தீவில் புலிகள் பிடித்தார்கள். மீனவர்களையும் ட்ராலர்களையும் விடுவிக்க இந்திய மீனவர்கள் பெருந்தொகையைப் புலிகளுக்குக் கொடுக்க வேண்டியிருந்ததாக இந்த விவகாரம் அறிந்தவர்கள் குறிப்பிடுகிறார்கள். பிப்ரவரி 2004இல் டாக்டர் சூர்யநாராயண் யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்தபோது, இலங்கை மீனவர்கள் பருத்தித்துறைக்கு அருகிலுள்ள வியாபாரி மூலை, இன்பருட்டி ஆகிய இடங்களில் 27 இந்திய மீனவர்களையும் 5 ட்ராலர்களையும் பிடித்திருப்பதாகச் செய்தி வந்தது.

இந்தக் காலகட்டத்தில், தமிழ் மீனவர்களின் நலனைக் காக்கும்

தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...

## இன்னொருவர் கண்ணோட்டம்

# கச்சதீவைத் தாண்டுவதைத் தவிர தமிழக மீனவர்களுக்கு வேறு வழி இல்லை! எழுத்தாளர் ஜோ.டி.குருஸ் கூறுகிறார்!!

மீனவர் பிரச்சினை என்பது கடலும் கடல் சார்ந்ததுமாகப் பார்க்கப்படாமல், நாடும் நாடுகள் கடந்ததுமாகப் பார்க்கப்படுகிறது. எனவேதான் அது தீர்க்க முடியாத சிக்கலாகவும் இருக்கிறது. மொழியால், இனத்தால், நிலப்பரப்பால் வேறுபட்டு இருந்தாலும், இலங்கை மீனவர்களும் தமிழக மீனவர்களும் அடிப்படையில் மீனவர்கள்தான். அவர்களுக்குக் கடல் பற்றிய புரிதல் உண்டு. மீன் பிடித்தொழிலில் உள்ள நுட்பங்கள், கஸ்ட நஸ்டங்கள் குறித்த அறிதல் உண்டு.

கச்சதீவு அந்தோனியார் கோயில் திருவிழாவில் தமிழக மீனவர்களும் இலங்கை மீனவர்களும் கட்டித் தழுவி அன்பு பாராட்டும் காட்சிகளைக் காணலாம். ஆனால், இந்த மீனவர்களின் வாழ்க்கையையே அறியாத சிங்களக் கடற்படை, இந்தியக் கடலோரக் காவல்படை அதிகாரிகள், இருநாட்டு அரசுகள்தான் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகிறார்கள். வட மேற்கு இலங்கைக்கும் கச்சதீவுக்கும் இடைப்பட்ட பூங்கொடித்தீவு, நெடுந்தீவு போன்ற பகுதிகளில்தான் மீன்வளம் அதிகம். தமிழகக் கடல் எல்லைக்குள் நீர்ப்பரப்பு உண்டே தவிர மீன் வளம் இல்லை. மீன் பிடிக்க வேண்டும் என்றால், கச்சதீவைத் தாண்டுவதைத் தவிர, தமிழக மீனவர்களுக்கு வேறு வழி இல்லை.

கடல் பரப்பை எல்லை போட்டுப் பிரிப்பதைவிட, கடல் வளத்தை எப்படி இருநாட்டு மீனவர்களும் பங்கிட்டுக்கொள்வது என்பதுதான் முக்கியம். ராமேஸ்வரத்தில் நாட்டுப் படகு மீனவர்களுக்கும் விசைப்படகு மீனவர்களுக்கும் இடையில் எந்தெந்த நாட்களில் மீன் பிடிக்கச் செல்லலாம் என்ற ஒப்பந்தம் இருக்கிறது. அதைப் போல இலங்கை மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையில் புரிதலும் ஒப்பந்தமும் ஏற்பட வேண்டியது அவசியம்.

பிழைப்புக்காக கடலில் பாடெடுத்துச் செல்லும் அப்பாவிகளைக் கண்மூடித்தனமாகத் தாக்குவதும் சுட்டுத்தள்ளுவதும் எந்தத் தார்மீக நெறிகளிலும் சேர்த்தி இல்லை. மீன் என்பது எப்போதும் வலையில் வந்து விழாது. இரவில் வலை போட்டுக் கண் அசந்துவிடுவார்கள் மீனவர்கள். காலையில் படகு இந்திய எல்லையைத் தாண்டிவிடும். படகு திசைமாறிப் போவது என்பது காற்று, தட்ப வெப்ப நிலை, நீரோட்டங்கள் எல்லாவற்றையும் பொறுத்தது. இதை எல்லாம் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், ஒருவர் மீனவர் வாழ்க்கை பற்றிப் புரிந்தவராக இருக்க வேண்டும்.

ஆனால், இதையெல்லாம் புரிந்து கொள்ளாதவர்கள்தான் அதிகாரிகளாகவும் அரசியல்வாதிகளாகவும் இருக்கிறார்கள். ஏதோ சிங்களக் கடற்படை அநியாயம் செய்கிறது என்று இல்லை. இந்தியக் கடற்படை செய்யும் அட்டூழியம் அதைவிட அதிகம். கொலை செய்வது இல்லையே தவிர, மீனவர்களைத் தாக்குவது. மீன்பிடிப் பொருட்களைச் சேதப்படுத்துவது என எல்லா அட்டூழியங்களையும் இந்தியக் கடற்படையும் செய்கிறது. ஒரு தமிழக மீனவருக்கு எப்படி சிங்களம் பேசும் இலங்கைக் கடற்படை அதிகாரி அந்நியரோ, அதேபோலத் தமிழ் தெரியாத வட மாநில கடற்படை அதிகாரியும் அந்நியராகத்தான் இருக்கிறார்.

சமீபத்தில் கச்சதீவைச் சுற்றிலும் எண்ணெய் வளங்கள் இருப்பதாகக் கண்டுபிடித்து உள்ளனர். ஏற்கெனவே எண்ணெய் அரசியலால் அரபுலகு நாடுகள் என்னென்ன பிரச்சினைகளைச் சந்திக்கின்றன என்பது நமக்குத் தெரியும். கச்சதீவிலும் அப்படி ஒரு ஆதிக்கப் போட்டி வரும். அந்தப் போட்டி எத்தகைய அழிவைக் கொடுக்கப்போகிறதோ தெரியவில்லை. அதற்கு முன், தமிழக மீனவர்கள், இலங்கை மீனவர்கள், இந்திய அரசு, இலங்கை அரசு என நான்கு தரப்பினரும் அமர்ந்து பேசி பரஸ்பரப் புரிதலுக்கு வருவதுதான் ஒரே வழி.

(தமிழகத்தின் முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவரான ஜே.டி.குரூஸ், மீனவர் பிரச்சினைகளை மையமாக வைத்து பல இலக்கியப் படைப்புகளைப் புனைந்துள்ளார். அவர் சமீபத்தில் 'ஆனந்த விகடன்' சஞ்சிகைக்குத் தெரிவித்த கருத்துகளின் சில முக்கிய பகுதிகளே மேலே தரப்பட்டுள்ளன) *

---

4ம் பக்கத்தொடர்ச்சி.....

முற்பட்டவர்களே, அந்த மாநாட்டை நடாத்தியவர்கள் என அதில் கூறப்பட்டுள்ளது. அந்த மாநாட்டைக் குழப்ப முற்பட்டவர்கள் தபால் இலாகாவுக்குள் புகுந்து பேராசிரியர் சிவசேகரம், சண்முகம் சிவலிங்கம் உட்பட, மாநாட்டு அழைப்பிதழ்களைத் திருடி, அவர்களுக்குக் கிடைக்காமால் செய்தார்கள் என்பதை இமயவரம்பன் அறிவாரோ என்னவோ?

இமயவரம்பனின் இந்தப் பிரசுரத்தின் எல்லாத் தப்புத் தவறுகளையும் ஆராயப் புகுந்தால், அதைவிட இரண்டு மடங்கு புத்தகம் ஒன்றை எழுதவேண்டி ஏற்படும் என்பதால் இத்துடன் முடித்துக் கொள்வோம்.

**புனிதன்** - சுன்னாகம்

# ‘வானவில்’ பற்றிய ஒரு விமர்சனக் கடிதம்!

**ஜூன்** 10, 2012 அன்று கனடாவின் ஸ்காபரோ நகரில் ‘வானவில்’ வெளியீட்டுக் குழுவினருக்கும் அதன் அச்சுப் பிரதியை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்பவர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. மிகவும் உயிரோட்டத்துடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது, பங்கேற்றவர்களால் ‘வானவில்’லின் குறை நிறைகள் குறித்தும், அதன் எதிர்கால வளர்ச்சி குறித்தும் பல பயனுள்ள கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. அக்கலந்துரையாடலில் பங்கேற்ற தோழர் ஒருவர் தனது கருத்துக்களை எழுத்து மூலமாகவும் முன் வைத்திருந்தார். அந்தத் தோழர் முன்வைத்த கருத்துகளின் முக்கியத்துவம் கருதி அதனைக் கீழே பிரசுரித்துள்ளோம்.

இத்தகைய ஆக்கபூர்வமான விமர்சனங்களை ‘வானவில்’ ஆசிரிய குழு உவகையுடன் வரவேற்கிறது. அத்துடன் அவற்றில் பயனுள்ளவையை ‘வானவில்’லில் பிரசுரிக்கவும் தயாராக இருக்கிறது.
அந்த விமர்சனக் கடிதம் வருமாறு:

தோழமையுடன் ‘வானவில்’ ஆசிரிய குழுவினருக்கு,

**இ**லங்கையில் புலிகள் தோற்கடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவுற்ற நிலையில், இன்னமும் தேசிய இனப்பிரச்சினையின் குறைந்தபட்சத் தீர்வுக்கான நியாயமான முன்முயற்சிகள் எதுவும் எடுக்கப்படாமலே காலம் கடத்தப்பட்டு வருகிறது. பேரினவாதிகளின் தயவில் தங்கி நிற்க வேண்டிய நிலையில் இல்லாமல், தனது தனிப்பலத்தில் தீர்வுகளை முன்னெடுக்கக்கூடிய வகையில், வல்லமையில் அரசாங்கம் இருந்தபோதும், பேரினவாதிகளைக் கட்டுப்படுத்தவோ கண்டிக்கவோ அல்லது குறைந்தபட்சம் அவர்களது கருத்துக்களை மறுத்துரைக்கவோ தன்னும் முயற்சிப்பதாகத் தெரியவில்லை. மாறாக அரசுடன் இணைந்துள்ள தேசிய சக்திகளிலும் பார்க்க பேரினவாதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களின் ஆரவாரத்தில் தன்னைத்தானே பெருமிதப்படுத்திக்கொள்ளும் போக்கினையே அரசாங்கம் கொண்டுள்ளதை வெளிப்படையாகவே உணர முடிகிறது. இத்தகைய போக்கினைக் கண்டிப்பதில் “வானவில்” தனது அழுத்தமான பங்களிப்பை வழங்கவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இலங்கை இராணுவம் ஒரு முதலாளித்துவக் கட்டமைப்பின் இராணுவம் என்பதும், குறிப்பாக இலங்கையில் பேரினவாதப் பரப்புரைகளின் கீழேயே இது வளர்க்கப்பட்டுள்ளது என்பதும் நாம் அறிந்ததே. அத்தோடு நீண்டகால யுத்த சூழ்நிலைகளில் வடக்கு கிழக்கு நிர்வாகக் கட்டமைப்புகளில் இராணுவத் தலையீடு இரண்டறக் கலந்துள்ளது என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் செல்லும் பயணிகளுக்கான வேண்டுகோளை இராணுவத் தலைமையகம் வெளியிட்டு, அவர்களது மின்னஞ்சல் முகவரியை நாமே வெளியிடும் அளவிற்குத்தான் நிர்வாக நடைமுறைகள் இன்னமும் உள்ளது என்பது வெளிப்படை.

நாம் விரும்பியோ விரும்பாமலோ தமிழ்க் குறுந்தேசியவாதப் பரப்புரைகளால் ஆட்படுத்தப்பட்டிருக்கும் மிகப்பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் மத்தியில்தான் நாம் எமது ‘வானவில்’ பத்திரிகையை எடுத்துச் செல்கிறோம். இன்றைய சூழ்நிலையில் சர்வதேச அழுத்தங்களின் பின்னால் மறைந்திருக்கும் ஏகாதிபத்திய நலன்களையும், அவற்றில் குளிர்காயும் புலம்பெயர் புலிகளின் சதிகளையும் நாம் மக்கள் முன் அம்பலப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான தளத்தை அரசு தன் பலத்தை நம்பி தீர்வுக்கான பாதையைத் திறப்பதன் மூலம் ஏற்படுத்த வேண்டும். நம்பிக்கையான முன்னெடுப்புகளை செயற்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்துவதன் மூலமே அதைக் கட்டியமைக்க முடியும்.




புலிகள் மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தே மக்களைப் பலியாக்கினார்கள் என்பதை வலியுறுத்தும் அதேவேளையில், இராணுவம் இனவாத ரீதியில் நடந்து கொள்ளவில்லை என்றோ, கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை எவர் சொல்வது சரி என்றோ நாமே வலிந்து எழுதிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. இதன் அர்த்தம் எல்லோரையும் எல்லாவற்றையும் எதிர்த்து எழுதுவதன் மூலம், நமக்கு ஒரு இடத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்பதல்ல. இவ்வாறான விடயங்களைத் தொட்டு நாம் எழுதவேண்டிய தேவைகளோ அவசியமோ இல்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அதேநேரம் அக்கட்டுரைக்குப் பலமாக யுத்தம் முடிந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் இராணுவம் பொதுமகனை அணைத்துச் செல்லும் படம் ஒன்றினை அரைப்பக்க அகலத்திற்கு இணைத்து விடுவது ஒரு சாதாரண வாசகனை அக்கட்டுரையைப் படிப்பதிலிருந்து விலக்கி வைக்குமேயன்றி வேறெதுவும் செய்யாது என்பது எனது

எண்ணம். ஒர் உதாரணத்திற்காகவே இக்கட்டுரையை இங்கு எடுத்துள்ளேன்.

குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாகவோ, ஸ்தாபனமாகவோ நாம் கணிக்கப்படாதவர்கள் என்ற போதும், சரியான அரசியல் இலக்கைக் கொண்டிருக்கிறோம் என்பதிலும், அது மிகப்பெரும்பான்மையான மக்களின் நீணடகால நலன் சார்ந்தது என்பதிலும் நாம் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தில் ஒவ்வொரு நபரையும் எமது கருத்தின்பால் ஈர்ப்பதற்கு நாம் அதீத முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒவ்வொரு கட்டத்திலும் நீணடகால நோக்கில் நம்மோடு முரண்படுவோருடனும் வேறுபடுவோருடனும் கூட கைகோர்த்து நடக்க வேண்டியுள்ளது. அதேவேளையில் எமது தனித்துவத்தையும் அடையாளத்தையும் தொடர்ந்து பேணவும் வேண்டியுள்ளது.

புலிகளையும் அவர்களைப் போசித்து வளர்க்கும் சர்வதேச சக்திகளையும் தோற்கடிக்க அரசுக்கு ஒத்துழைக்க வேண்டிய அதேவேளையில், அத்தகைய சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்கு தானாகவே பாதை திறந்துவிடும் அரசின் போக்கையும் கண்டிக்க வேண்டியுள்ளது. எனவே எப்போதும் எமது எழுத்துக்கள் எமது கருத்திலிருந்து வரவேண்டுமேயன்றி, அரசு தரப்பிலிருந்து எழுதப்படுபவை போலத் தோற்றமளிக்கக்கூடாதென்பதில் நாம் விழிப்பாயிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.
நன்றி

இப்படிக்கு
நாதன்

**(இவ்விமர்சனக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்களை கால் கோளாக வைத்து ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாறல் ஒன்று ஏற்படுமாயின் 'வானவில்' அதை மகிழ்ச்சியுடன் வரவேற்கும். எனவே வாசகர்களே, இது சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களை முன்வையுங்கள். விமர்சனம் – சுயவிமர்சனமே எம்மை வழிநடாத்தும் ஆசான் என்பதில் நாம் எப்பொழுதும் அசையாத நம்பிக்கையுடன் செயல்பட்டு வந்துள்ளோம். –ஆசிரிய குழு, 'வானவில்')**
*

6ம் பக்கத்தொடர்ச்சி...

வலிமை இலங்கைக் கடற்படைக்கு இல்லை என்று இலங்கைத் தமிழ் மீனவர்களிடையே பிரச்சாரத்தை முடுக்கிவிட்டனர் புலிகள். 'தமிழ் ஈழக் கடல் வளங்களும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்' என்ற தலைப்பில் நடந்த ஒரு கருத்தரங்கில் பேசிய இலங்கை மீனவ நிபுணரான டாக்டர் ஏ.சூசை ஆனந்தன், 'இந்திய ட்ராலர்கள் வடபகுதிக்குள் நுழைந்து கடல் வளங்களை அள்ளிச் செல்லும்போது இதை வேடிக்கை பார்ப்பதன் மூலம் அவர்களுக்கு உதவுவதாக' இலங்கைக் கடற்படையின் மீது குற்றம்சாட்டினார். இலங்கைக் கடற்படையைப் பொறுத்தவரை இந்தியாவின் நட்புதான் முக்கியம் எனப் புலிகள் பிரச்சாரம் செய்தார்கள். இந்த விவகாரத்தை அமைதியாகத் தீர்க்க வேண்டும் என்றால், இதுபற்றித் தங்களுடன் நேரடியாகப் பேசவேண்டுமென இந்தியாவுக்குப் புலிகள் சமிக்ஞை அனுப்பினார்கள். அப்படி நடந்திருக்கும் பட்சத்தில் அந்தப் பிராந்தியத்தில் மூன்றாவது கடற்படையாகக் கடற்புலிகளுக்கு அங்கீகாரம் கொடுத்தது போலாகியிருக்கும்.

இலங்கை மற்றும் அந்நிய உளவுத்துறையினர் தந்த தகவல்களின் அடிப்படையில், புலிகளின் கடற்படையில் சுமார் 2000 முதல் 3000 வீரர்கள் இருந்திருக்கக்கூடும். தங்கள் படைத்திறனை அதிகரிப்பதற்காகப் பல ஆசிய, ஐரோப்பிய நாடுகளிலிருந்து புலிகள் பல அதிநவீன சாதனங்களை வாங்கிக் குவித்திருந்தனர். தங்களை ஒரு கடற்படையாக அங்கீகரிக்க வேண்டும் என்று கோரியதன் மூலம் புலிகள் இயக்கம் இந்திய, இலங்கை நாடுகளின் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தலாக உருவெடுத்தனர் என்கிறார் தென்னிந்தியக் கடலோரக் காவற்படையின் முன்னாள் தலைவரான கமடோர் வாசன். ஐஎஸ்பிஎஸ் (International Ships and Ports Security) சட்டத்தின்படி, ஒரு கப்பல் துறைமுகத்தில் நிறுத்த அனுமதி கோருவதானால், கப்பல் வருவதற்கு முன்பே அந்தக் கப்பலின் ஏஜண்டோ உரிமையாளரோ அந்தத் துறைமுக அதிகாரிகளுக்கு ஏகப்பட்ட தகவல்களை அளிக்க வேண்டியிருக்கும். கடற்புலிகளை ஒரு கடற்படையாக அங்கீகரித்தால், இலங்கையில் இருக்கும் பல துறைமுகங்களும் பல கடல் வழிகளும் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் கைகளில் போய்ச்சேரும். 'சட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்பு' என்ற பெயரில் எதை வேண்டுமானாலும் புலிகள் தங்கள் துறைமுகத்திற்குக் கொண்டு வர முடியும். இலங்கைக் கடற்பகுதி 'கடல் போக்குவரத்திற்கு மிகவும் அபாயகரமான இடமாகிவிட்டதாக' 1997 செப்டம்பர் வாக்கிலேயே மாரிடைம் இன்டலிஜென்ஸ் அண்ட் கவுண்டர் பைரசி ஆபரேசன்ஸ் சென்டர் ஒர் எச்சரிக்கை விடுத்தது. உலகில் கடற்கொள்ளை நடக்கும் கடற்பரப்புகளில் இலங்கைக் கடற்பகுதி ஐந்தாவது இடத்தை வகிக்கிறது. ஆனால் தற்போது புலிகள் இயக்கம் இராணுவரீதியாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்ட நிலையில் இந்தத் தாக்குதல்கள் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(இந்தப் பத்தி, வி.சூரியநாராயணன், கே.முரளீதரன் ஆகியோர் கூட்டாக எழுதி, காலச்சுவடு பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள 'கச்சதீவும் இந்திய மீனவரும்' என்ற நூலில் உள்ள சில பகுதிகளாகும். அவர்களுக்கு 'வானவில்' நன்றி தெரிவித்துக் கொள்கிறது)** *

# எதிர்காலம் கேள்விக்குறியே!



என்னதான் இறுக்கமான சிக்கனத்திட்டங்களை (Austerity Packet) கடைப்பிடிக்கும்படி சர்வதேச நாணய நிதியமும் (International Monetary Fund), ஐரோப்பிய மத்திய வங்கியும் வலியுறுத்தினாலும் தெற்கு ஐரோப்பிய நாடுகள் மேலும் மேலும் மோசமான நிலைமைகளுக்கே செல்வதாகக் கிரேக்கத் தொழிற்சங்கவாதி Themistoklis kolsifakis எச்சரிக்கிறார்.

ஜேர்மனிய தொழிற்சங்கத்தின் அழைப்பையேற்று ஸ்பெயின், போர்த்துக்கல் தொழிற்சங்கவாதிகளும் கலந்து கொண்ட கூட்டத்திலேயே மேற்கூறிய கருத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இச் சிக்கனத் திட்டத்தின் மூலம் மக்கள், தங்களின் உயிரைப் பிடித்து வைத்திருப்பதற்காக தமது அன்றாட அடிப்படைத் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளுமாறு, அதாவது வயிற்றை இறுக்கக் கட்டிக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். பள்ளிச்சிறார்கள் தமது எதிர்காலம் பற்றி எதுவுமே தெரியாத நிலையில் பசித்த வயிறுடனே பள்ளி செல்கிறார்கள்.

கடந்த மூன்று வருட, கிரேக்க மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தை நீங்கள் எவருமே கற்பனை செய்து பார்க்க முடியாதென்றார். இதற்கு சற்றும் குறைவில்லாத நிலைமையே ஸ்பெயினிலும், போர்த்துக்கல்லிலும் நிலவுவதாக அந்நாட்டு உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டனர்.

எல்லா இடங்களிலும் வறுமையே வளர்ந்து வருகிறது. அனைத்துக் குடும்பங்களும் பாட்டன்மார்களின் ஓய்வூதியத் தயவிலேயே வாழ்க்கையை ஓட்டுவதாகத் தெரிவிக்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த நெருக்கடியை வருங்கால இளம் சந்ததியினரே முகம் கொடுப்பதாகக் கூறுகின்றனர். 14வயதிற்கும் -24 வயதிற்கும் இடைப்பட்டவர்களின் வேலை இல்லாதோரின் வீதம் ஸ்பெயினில் 45.7, கிரேக்கத்தில் 38.5 வீதம், இத்தாலியில் 27.8 வீதம், போர்த்துக்கல்லில் 26.8 வீதம் என்று புள்ளிவிபரங்களும் பறைசாற்றுகின்றன. அபாயகரமான நிலைமை என்னவெனில் கிரேக்கத்திலும், ஸ்பெயினிலும் முழுச் சந்ததியுமே எதிர்காலம் பற்றிய எந்தவித நம்பிக்கையுமற்றே வளர்ந்து வருகிறது. இது ஐரோப்பாவில் நம்பகத்தன்மையையும், ஜனநாயகத்தையும் ஆபத்திற்குள்ளாக்குகிறது.

பாதிப்புக்குள்ளாகும் ஜனநாயகம், தொழிலாளர்களின் உரிமைகளை மட்டுப்படுத்தி தொழிலாளர்களை, தொழில் வழங்குநர்களால் தன்னிச்சையாக வேலையிலிருந்து தூக்கியெறிவதை இலகுபடுத்தியுள்ளது. அவர்களின் வேலைநிறுத்தப் போராட்ட உரிமையையும் மட்டுப்படுத்துகிறது என்கின்றனர்.

ஆம், பெரு நிறுவனங்களின் தயவில் தங்கிநிற்கும் மேற்குலகின் சிக்கனத்திட்டங்களெல்லாம் சாதாரண மக்களின் அடிமடியிலேயே கைவைக்கின்றன. விற்பனைவரியை அதிகரித்தல், குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும் வருமானவரியை அறிமுகம் செய்தல், சம்பளவெட்டுச் செய்தல், விடுமுறைக்காலத்தில் கொடுக்கும் இனாமை ரத்துச்செய்தல் போன்ற மக்கள் நலன்சாராத, தொழிலாளர் நலன்சாராத திட்டங்களே அவை.

**-ஆனந்ததேவன்**

## புதிய வெளியீடுகள்!

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், அண்மையில் பின்வரும் இரண்டு புதிய நூல்களை வெளியிட்டுள்ளது.

- வடபுலத்து இடதுசாரி இயக்க முன்னோடிகள் (வடக்கில் இடதுசாரி இயக்கத்தை உருவாக்கிய 12 முன்னோடிகள் குறித்து பன்னிருவர் எழுதிய கட்டுரைகள்)

- தளிர்களின் சுமைகள் (கவிதைத் தொகுதி)
  -சுமதி குகதாசன்

இவற்றையும், மன்றத்தின் 20க்கு மேற்பட்ட முன்னைய வெளியீடுகளையும் பெற விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

Sri Lanka Progressive Art & Literature Association
18-6/1, Collingwood Place
Colombo – 6
Sri Lanka
E-Mail: Kailashpath@yahoo.com

## "கனவு" பலித்தது?

அண்மையில் கனடா ஸ்காபரோவில் உள்ள பிரபல தமிழ் உணவகம் ஒன்றுக்குச் சென்றிருந்தென். அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த வண்ண விளம்பரப் பிரசுரம் ஒன்று சொல்லியது:

"உங்களுக்கான புதிய ஆடம்பரமான வீடு யாழ்ப்பாணத்தில்"
"கட்டுமானப்பணி நடைபெறுகிறது. ஐப்பசி மாதம் 2013இல் நிறைவடையும்"
"விலை 10 மில்லியன் ரூபாவிலிருந்து"
இதனைப் படித்ததும் உள்ளே வரும்போது கடையின் பெயர்ப்பலகையில் பொறிக்கப்பட்டிருந்த வாசகம் நினைவில் பொறி தட்டியது.
"மாண்ட வீரர் கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில் தமிழ் மண் குளிக்கும்"
அடடா! கனவு பலித்துவிட்டதுதான் போலும்!!

**- சன்னதன்**

# இனப்பிரச்சினைத் தீர்வைக் குழப்புவதில் மீண்டும் கைகோர்த்துள்ள ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும்!

- நமது அரசியல் நிருபர்

இலங்கையில் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு மூன்றாண்டுகள் கழிந்துவிட்ட போதிலும், அப்போர் உருவானதிற்கு மூல காரணமாக அமைந்த இனப்பிரச்சினைக்கு இன்னமும் ஒரு தீர்வுகாணப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. அதற்கான காரணத்தைத் தேடுபவர்கள் அரசாங்கத்தின் மீது மட்டுமே விரலை நீட்டுகின்றனர். சாதாரண மக்கள் அவ்வாறு அரசாங்கத்தைக் குறைகூறுவதில் சில நியாயங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

ஏனெனில் அரசு பல்லாயிரக்கணக்கான உயிர்களை விலையாகக் கொடுத்து இந்த கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த போது, மக்களுக்குச் சொல்ல முடியாத இழப்புகள் ஏற்பட்ட போதும், யுத்தம் முடிவுக்கு வந்தால் நிம்மதியான ஒரு வாழ்க்கை கிடைப்பதுடன், இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வும் கிடைக்கும் என மக்கள் நம்பினர். அரசாங்கமும் அவ்வாறான ஒரு நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி வந்தது. அதாவது 13வது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், அவரது சிரேஸ்ட அமைச்சர்களும் கூறி வந்தனர்.

ஆனால் இதுவரை அந்தத் திசையில் அரசாங்கம் ஒரு சிறு நகர்வைத்தன்னும் மேற்கொள்ளாததால் மக்கள் அரசின் மீது நம்பிக்கை இழந்துள்ளமை இயல்பே.

இந்த விடயத்தில் அரசாங்கம் சிங்களப் பேரினவாத அடிப்படையில் செயல்பட்டு தமிழரை ஒடுக்க முயல்வதாலேயே, இனப்பிரச்சினைத் தீர்வை இழுத்தடித்து வருகிறது எனத் தமிழர் தரப்புகள் குற்றம்சாட்டி வருகின்றன. ஆனால் அரசாங்கம் இதைத் திட்டவட்டமாக மறுப்பதுடன், பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றின் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரும்படி பிரதான தமிழ் அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு திரும்பத் திரும்ப அழைப்பு விடுத்து வருகிறது. முதலில் அந்த அழைப்பை ஏற்கப் பிடிவாதமாக மறுத்த தமிழ் கூட்டமைப்பு, பின்னர் தனது நிலைப்பாட்டில் ஒரு நெகிழ்வைக் காட்டுவது போலப் பாசாங்கு செய்தது. அதன்பின்னர் ‘மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதை’யாகப் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டது.

உண்மையில் இனப்பிரச்சினைத் தீர்வில் அரசாங்கம் இதயசுத்தியுடன் உள்ளதா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழ் கூட்டமைப்புக்கு ஒரு அருமையான வாய்ப்பாக இருந்தது. ஏனெனில் அமையவிருந்த தெரிவுக்குழுவில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கும். அதன்படி பார்த்தால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமின்றி, அரசாங்கத்தில் பங்காளிக் கட்சிகளாக இருக்கும் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் இடதுசாரிக் கட்சிகளான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ், தேசிய முஸ்லீம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி. சமசமாஜக்கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி போன்ற கட்சிகளும் நியாயமானதொரு இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நின்றிருப்பார்கள்.

அதுமாத்திரமின்றி, பிரதான அரசாங்கக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், போலியான முறையில் தமிழர் ஆதரவு காட்டிவரும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட ஏதாவது ஒரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டியிருந்திருக்கும். இந்த நிலைமையில் அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு சர்வசதா சிங்கள இனவாதம் பேசிவரும் ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி என்பனவும், வெளியே இருந்துகொண்டு இனவாதம் பேசிவரும் ஜே.வி.பி, சரத் பொன்சேகா போன்றோரும்தான் ஒரு சிறுபான்மையினராக தீர்வு முயற்சிகளை எதிர்ப்பார்கள்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உண்மையிலேயே தமிழ் மக்கள் பிரச்சினை தீர்வதில் அக்கறை இருக்குமாக

இருந்தால், பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றி, அங்கு இனப்பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வு காண்பதில் அக்கறையுள்ள கட்சிகளுடன் ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை உருவாக்கி, தீர்வு முயற்சிகளுக்கான புதிய கதவுகளைத் திறந்திருக்க வேண்டும். அப்படிச் செய்தால் அது தமிழ் கூட்டமைப்பின் இதயசுத்தியை எடுத்துக்காட்டுவதுடன், அரசியல் சாணக்கியம் மிகுந்ததாகவும் இருந்திருக்கும். ஆனால் கூட்டமைப்பு அப்படிச் செய்யவில்லை. செய்ய விரும்பவில்லை என்பதே உண்மையாகும்.

உண்மையில் கூட்டமைப்பு எதை விரும்புகிறது? அது தன்னுடன் மட்டும் அரசாங்கம் பேசிஇனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என விரும்புகிறது. அதன் மூலம் ஒரேநேரத்தில் பல இலக்குகளை அடைய அது முற்படுகிறது. தமிழ் – முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இதர கட்சிகளுடன் பேசாமல் தன்னுடன் மட்டும் பேச வைப்பதன் மூலம், தமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தாங்கள்தான் என்ற புலிகளின் ஜனநாயக மறுப்பு எதேச்சாதிகார நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம். இது கூட்டமைப்பின் ஒரு இலக்கு.

அத்தோடு இதர கட்சிகளின் பங்களிப்பு இல்லாமல் அரசாங்கமும் தமிழ் கூட்டமைப்பும் மட்டும் பேசி ஒரு தீர்வு எட்டப்பட்டால், அதை ஏனைய கட்சிகள் – குறிப்பாக சிங்கள இனவாதக் கட்சிகள் – குழப்பியடிக்கும் என்பது கூட்டமைப்பின் இன்னொரு எதிர்பார்ப்பு. அப்படி எதுவும் நடக்காமல் (நடக்காமல் விடுவதற்குச் சாதியமில்லை) பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் அதற்கான முழு உரிமையையும் புகழையும் தனதாக்கிக் கொள்ளலாம் என்ற அது அல்லது இது என்ற கபட நோக்கம் இன்னொரு திட்டம்.

அடுத்த இலக்கு பிச்சைக்காரன் தனது புண்ணை மாற்றாமல் வைத்து அதைக்காட்டியே வாழ்நாள் முழுவதும் பிச்சை எடுப்பது போல, இனப்பிரச்சினைத் தீர்வு எதுவும் எட்டப்படவிடாமல் இழுத்தடித்து அல்லது குழப்பியடித்து தொடர்ந்து அதில் அரசியல் குளிர்காய்வது. அவ்வாறான ஒரு நிலை இருந்தால் இலங்கையில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடாத்தப்படுகிறாகள், ஒடுக்குமுறைக்குள்ளாகிறார்கள் என சர்வதேச அரங்கில் ஒப்பாரி வைத்து அனுதாபம் தேட வசதியாக இருக்கும்.

இந்த யுக்தியையே கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக எல்லாப் பிரதான தமிழ்த் தலைமைகளும் செய்து வந்திருக்கின்றன. இப்பொழுது அதற்கான தேவை மேலும் அதிகரித்துள்ளது. புலிகள் வேகமாகவும் பலமாகவும் உருவாகி படிப்படியாக அழிந்து போனபின்னர், புலம்பெயர் நாடுகளில் வாழும் புலி மாபியாக்களே அந்த இயக்கத்தின் மிச்சசொச்ச நினைவுகளைப் பாதுகாத்து வருகிறார்கள். அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன காரணம் கொண்டும் அரசாங்கத்துடன் இணைந்து பேச்சுவார்த்தை நடாத்தி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுகண்டுவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய போக்குகளில் அவர்களது சட்டாம்பிள்ளைத்தனம் மிகவும் கனதியாக இருப்பதும் ஒரு காரணமாகும்.

எல்லாவற்றுக்கும் புலிகளின் உருவாக்கத்திலும் அவர்களின் வளர்ச்சியிலும் உள்நோக்கத்துடன் கூடிய மிகப்பெரிய பங்கு வகித்த சில ஏகாதிபத்திய சக்திகள், அவர்களது எதிர்பாராத அழிவுக்குப் பின்னர், இலங்கை அரசைப் பழிவாங்குவதிலும், தமக்குப் பிடிக்காத தற்போதைய இலங்கை அரசை மாற்றித் தமக்கு ஏதுவான ஒரு அரசை அங்கு உருவாக்குவதிலும் திட்டமிட்ட வகையில் செயல்பட்டு வருகின்றனர். அதற்காக அவர்கள் எப்பொழுதுமே தமக்கு நம்பிக்கையான ஐ.தே.க தலைமையில் அரசுக்கு எதிரான சக்திகள் அனைத்தையும் திரட்டி வருகின்றனர். அந்த அணியில் தீவிர வலதுசாரிக் கட்சியான ஐ.தே.கவிலிருந்து – தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, சரத் பொன்சேகா, மனோ கணேசன் உள்பட – தீவிர இடதுசாரித்தனம் பேசும் விக்கிமபாகு கருணரத்தினவின் சிறு குழு வரை அனைவரையும் அணிதிரட்டி வருகின்றனர். அதன் வெளிப்பாடே இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் ஐ.தே.க – தமிழ் கூட்டமைப்பின் ‘கூட்டுக் கலியாண’ மேதினக் கூட்டம்.

இதுதான் தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான நிலவரம். அதாவது அரசாங்கம் அமைக்கவுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்ற மறுப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தள்ளிப் போடுவதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நிகழ்ச்சித் திட்டம். இனப்பிரச்சினைத் தீர்வைவிட, ஏகாதிபத்திய நலன்களுக்கான ஆட்சி மாற்றம் ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடனும் கூட கூட்டுச் சேர்வதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தயாராக உள்ளது.

1957இல் பண்டா – செல்வா ஒப்பந்தத்தையும், 1990இல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தையும், 2000இல் சந்திரிகா முன்வைத்த தீர்வுத் திட்டத்தையும் குழப்புவதற்கு அப்போதைய தமிழ்த் தலைமைகள் எப்படி ஐ.தே.கவுக்கு ஒத்துழைத்தனவோ, அதுபோலவே தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையும் நடந்து கொள்கிறது. அதற்கு ஒரு உதாரணம், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது போர் வெறியனும் சிங்களப் பேரினவாதியுமான முன்னாள்

இராணுவத் தளபதி சரத் பொன்சேகவை கூட்டமைப்பு வெளிப்படையாக ஆதரித்தமை. சமீபத்திய உதாரணம், உதைத்த காலை நக்குவது போல பேரினவாத ஐ.தே.கவுடன் இணைந்து தமிழர்களின் 'தாயக பூமி'யான யாழ்ப்பாணத்தில் ஒன்றாக மேதினக் கூட்டம் நடாத்தியமை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கபட நோக்கங்களையும், புலம்பெயர் புலிகளின் சதித் திட்டங்களையும் புரிந்து கொண்டபடியால்தான், அவர்களுக்கு உதவும் முகமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு வராவிட்டால் தானும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெறப்போவதில்லை என ஐ.தே.க சமீபத்தில் அறிவித்துள்ளது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இன்றைய அரசாங்கம் மெத்தனப் போக்கையும், தேவையற்ற கால தாமதத்தையும் செய்கின்றது என்ற நியாயமான குற்றச்சாட்டை நாம் நேர்மையுடன் ஏற்றுக்கொள்கின்ற அதேவேளையில், ஏகாதிபத்திய சக்திகளின் பின்னணியில் ஐ.தே.க தலைமையுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைத் தீர்வைக் குழப்புவதில் வகித்து வரும் பங்கு பாத்திரத்தைக் காணத்தவறுவோமாயின், இருட்டினில் கறுப்புப் பூனையைத் தேடும் குருடராகத்தான் இருப்போம்.

*

# தமிழகப் பிழைப்புவாத அரசியல்வாதிகளின் செயலை நியாயப்படுத்தும் மனோ கணேசன்!

**- வி.இராமையா**

இன்று இலங்கை அரசியல் பரப்பில் மக்கள் நலன்கள் பற்றிப் பேசுவோரைவிட இனவாதம் பேசுவோரின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இலங்கையில் தீவிர இனவாதம் பேசிய பல அரசியல்வாதிகள் பின்னர் மக்கள் மத்தியில் செல்லாக்காசாகிப் போனது வரலாறு. தென்னிலங்கையைப் பொறுத்தவரை கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க, சிறில் மத்யூ, டாக்டர் நெவில் பெர்னாண்டோ எனப் பலர் இந்தப் பட்டியலில் இருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள். வரலாறு இவர்களைக் கடைசியில் குப்பைக்கூடைக்குள்தான் தூக்கி வீசியது.

இருந்தும் அந்த ஐ.தே.க.தான் தமிழரின் நண்பன் என சிலர் இப்பொழுது பரப்புரை செய்து வருகின்றனர். அவர்களில் முதன்மையானவர் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன். இவரைப் பற்றிய அறிமுகம் அதிகம் தேவையில்லை. இவரின் தந்தை வி.பி.கணேசன் ஒரு பிரபல தொழிற்சங்கவாதி. மலையகத்தின் பெரும் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான் ஆரம்பித்து நடாத்திய போது, அவருடன் இணைந்து பணியாற்றிய ஏ.அஸீஸ், பின்னர் கருத்து வேறுபாட்டால் அதிலிருந்த பிரிந்து ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்றொரு தொழிற்சங்கத்தை மலையக மத்தியில் ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தினார்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பாலும் இந்திய வம்சாவழியினராக இருந்தபோதும், பாகிஸ்தானிய வம்சாவழியினரான அஸீசின் தொழிற்சங்கத்தில் அணிதிரண்டமை அவர்களது ஜனநாயக எண்ணத்தின் வெளிப்பாடாகும். ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசின் பொதுச்செயலாளராக இருந்தவர் மனோ கணேசனின் அப்பாவான வி.பி.கணேசன். தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பாரம்பரியமாக ஐ.தே.கவின் அரசியல் கூட்டாளியாக இருந்து வந்தது. அதேவேளையில் அஸீசின் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் பெரும்பாலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியையே ஆதரித்தது. கடைசியில் வி.பி.கணேசன் அஸீசிற்கு காலை வாரிவிட்டு வேறு ஒரு தொழிற்சங்கத்தை ஆரம்பித்தார். அது ஐ.தே.கவுக்குச் சார்பாக இருந்தது.

அந்தப் பாரம்பரியத்தில் வந்த அவரது புதல்வரான மனோ கணேசன் இப்பொழுது ஐ.தே.க அரசியலை வேறு வேறு பெயர்களில் தமிழ் மக்கள் மத்தியில் விற்பனை செய்ய முயன்று வருகிறார். ஆனால் தமிழர்களுக்காகவே தான் உயிர் வாழ்வது போலவும் பாசாங்கு செய்கிறார். சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து நடாத்திய மேதினக் கூட்டத்தில் இரா.சம்பந்தன் ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை ஏந்தியமைக்கு பின்னணியில் இருந்தவர் மனோ கணேசன் எனக் கூறப்படுகிறது. ஐ.தே.கவுக்கும் தமிழ் கூட்டமைப்புக்கும் இடையிலான 'கலியாணத் தரகராக' மனோ கணேசன் செயல்படுவதாக அரசியல் வட்டாரங்களில் ஒரு கதை உண்டு.

மனோ கணேசன் தனித்தோ ஐ.தே.கவுடன் இணைந்தோ அரசியல் செய்வதற்கு பூரண சுதந்திரம் உண்டு. கொழும்பு வர்த்தகர்களில் ஒருவரான அவருக்கு தனது வியாபாரத்தைப் பெருக்குவதற்கு அரசியல் வியாபாரமும் தேவைப்படுவது விளங்கிக் கொள்ளக்கூடியதுதான். ஆனால் அவருக்கு ஐ.தே.க சிங்களவர்கள் இனிப்பதும் அதற்கெதிரான சிங்களவர்கள் கசப்பதும்தான் வேடிக்கையானது. அதைவிட மோசமான விடயம் அவர் தேசத்துரோகமாக செயற்படுவதுதான்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

முன்பக்கத்தொடர்ச்சி...

மக்கள் அவ்வாறு கருதியதிற்குச் சில காரணங்கள் இருந்தன. இறுதியுத்த நேரத்தில் புலிகள் இலட்சக்கணக்கான மக்களைத் தமது பாதுகாப்புக் கேடயமாக முள்ளிவாய்க்கால் என்ற ஒரு சிறிய பகுதியில் பிடித்து வைத்திருந்தபோது, யுத்தத்தின் இடையில் சிக்கிப் பலர் மரணித்துக் கொண்டிருந்தனர். அந்த மக்களைப் பாதுகாப்பாக விடுவிக்கும்படி கூட்டமைப்பினர் புலிகளை ஒருபோதும் கோரவில்லை. யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரையும் யுத்தத்தை நிறுத்தும்படியும் கோரவில்லை. இந்தியாவிடமும் சில மேற்கு நாடுகளிடமும் தமக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி போர் நிறுத்தம் ஒன்றுக்கு வழி வகுக்கவும் இல்லை.

உண்மையில் அந்த நேரத்தில் கூட்டமைப்பினரின் எண்ணம் வேறாக இருந்தது. அதாவது தாம் பொதுமக்களை விடுவிக்கும்படியோ, போர்நிறுத்தம் செய்யும்படியோ கோரி, பின்னர் வழமைபோல ஏதோ ஒரு விதத்தில் இராணுவ முற்றுகையை உடைத்துக்கொண்டு புலிகள் மீண்டும் தலையைத் தூக்கிவிட்டால், தமது தலைகள் உருண்டுவிடும் என ஒருபக்கத்தில் அஞ்சினார்கள். இன்னொரு பக்கத்தில் புலிகளை அரசாங்கம் அழித்துவிட்டால் அதுவும் நன்மைதான். தாம் முன்னர்போல் தமிழ் மக்களின் முதுகில் சவாரி செய்துகொண்டு பாராளுமன்றச் சித்து விளையாட்டில் ஈடுபடலாம் எனவும் எண்ணினார்கள்.

மறுபக்கத்தில் தமிழ் கூட்டமைப்பினர் மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் வருவதற்கு வாய்ப்பில்லையென மக்கள் கருதியதிற்கு இன்னொரு காரணமும் இருந்தது. யுத்தம் முடிந்துவிட்டதால், அரசாங்கம் இனிமேலும் இனப்பிரச்சினைத் தீர்வை இழுத்தடித்து தமிழ் கூட்டமைப்புப் போன்ற இனவாதக் கட்சிகள் தலைதூக்குவதற்கு இடமளியாது எனவும் மக்கள் உறுதியாக நம்பினர்.

ஆனால் மக்களின் எல்லா நம்பிக்கைகளிலும் இப்பொழுது மண் விழுந்துள்ளது.

ஜெயானந்தமூர்த்தியைத் தவிர வெளிநாடுகளில் அரசுக்கு எதிரான பிரச்சாரங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் எந்தவிதமான பிரச்சினையோ தயக்கமோ இன்றி நாட்டுக்குத் திரும்பி வந்ததுடன், தொடர்ந்தும் தமது அரச எதிர்ப்புப் பிரச்சாரங்களைச் செய்வதுடன், கடைகெட்ட இனவாதப் பிரச்சாரங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதுமாத்திரமின்றி தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையும் ஆரம்பத்தில் தயக்கமிருந்தாலும், பின்னர் துணிச்சலை வரவழைத்துக்கொண்டு தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து மீண்டும் தமது வழமையான இனவாதப் பிரச்சாரத்தை ஆரம்பித்ததுடன், பாராளுமன்றத் தேர்தலிலும் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் ஈடுபட்டுக் கணிசமான வெற்றியையும் பெற்றுள்ளது.

அரசாங்கம் இப்படியான ஒரு ஜனநாயக இடைவெளியைத் தன்னை எதிர்ப்பவர்களுக்கும் வழங்கியமையானது, வரவேற்கப்பட வேண்டியது என்றாலும், அதை அவர்கள் துஸ்பிரயோகம் செய்வதற்கான வாய்ப்பை வழங்காமல் பார்த்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

அதுமட்டுமின்றி, அரசைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் சில வெளிநாட்டு சக்திகளுடனும் கூட்டும் சேர்ந்துள்ளது. அத்துடன் புலம்பெயர் நாடுகளில் செயல்பட்டு வருகின்ற புலிகளின் நிகழ்ச்சி நிரலுடனும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. கூட்டமைப்பின் இந்தச் செயற்பாடு தென்னிலங்கையிலுள்ள சிங்களப் பேரினவாத சக்திகளை மட்டுமின்றி, சாதாரண மக்களையும் கோபத்துக்குள்ளாக்கியுள்ளது.

இந்த நிலைமையால் தெற்கில் சிங்கள இனவாத சக்திகள் தமது இனவாதக் கூச்சல்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு களம் அமைத்துக் கொடுத்துள்ளது. பெரும்பான்மையான தமிழ் மக்களோ சிங்கள மக்களோ முன்னைய காலங்கள் அளவுக்கு இனவாதக் கோசங்களின் பின்னால் இழுபட்டுச் செல்லாவிட்டாலும், இரு பகுதியிலும் இருக்கும் இனவாதிகள் போடுகின்ற இந்த இனவாதச் கூச்சல் பெருந்தீயாக மாறக்கூடிய சூழல் இல்லாமல் இல்லை என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இதில் மிகவும் பாரதூரமான விடயமென்னவெனில், அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களே, குறிப்பாக அரசின் முக்கியமான அமைச்சுப் பகுதிகளில் வீற்றிருக்கும் சம்பிக்க ரணவக்க, விமல்வீரவன்ச போன்றவர்களே மிகவும் பகிரங்கமாக இனவாதத் தீயைக் கக்குவதுதான். இப்படியானவர்களை வைத்துக்கொண்டு சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரச்சினையை அரசு எவ்வாறு தீர்க்கப்போகின்றது என மக்கள் கேட்பதில் நியாமில்லாமல் இல்லை. புலிகளை ஒழித்துக்கட்டியது அமைதி வழியில் அரசியல் ரீதியில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பாதையைத் திறந்துவிட்டுள்ளது என்பதற்குப் பதிலாக, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அவசியத்தை இல்லாதொழித்துள்ளது என இந்த இனவாத அமைச்சர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

அரசாங்கம் யுத்தம் முடிந்த கையோடு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளை உடனும் முடுக்கி விட்டிருந்தால், இன்று

வடக்கிலும் தெற்கிலும் புலம்பெயர் நாடுகளிலும் வீசும் இனவாத அலையைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். அரசாங்கம் இந்த அதிமுக்கியமான பணியைச் செய்யாமல், தனக்கு இதைவிட வேறு முக்கியமான வேலை இருப்பது போலவும், வடக்கு கிழக்கில் சில அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்தால் இனப்பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும் என்ற தப்பான கணிப்பீட்டிலும் செயல்பட்டதன் விளைவே இன்றைய சூழல் உருவாகக் காரணமாகும்.

இனப்பிரச்சனையை வைத்து அரசியல் செய்தாலும், அது தீர்வதை விரும்பாத, அப்படி அது தீர்க்கப்பட்டாலும், வேறு ஏதாவது புதிய பிரச்சினைகளைக் கிளப்பி மீண்டும் மீண்டும் அந்தப் பிரச்சினையிலேயே குளிர்காயக் காத்திருக்கின்ற ஒரு தமிழ் தலைமையுடன்தான் தான், இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாளுகிறோம் என்ற பிரக்ஞை இல்லாமலே அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்த் தலைமைகள் கடந்த காலத்தில் செய்த விபரீதமான செயல்பாடுகளை அரசாங்கம் விளங்கிக்கொண்டதாவும் தெரியவில்லை.

அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்க்க தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்காதது மட்டுமின்றி, தனது அரசில் உள்ள பொறுப்புவாய்ந்தவர்களின் இனவாதச் கூச்சல்களைககூடக் கட்டுப்படுத்தத் தவறியுள்ளது. குறைந்தபட்சம் இனவாத அமைச்சர்களின் கருத்துக்கள் அரசின கருத்தல்ல என்பதைக்கூட தெளிவுபடுத்தவில்லை. மாறாக புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலுள்ள மிகச் சிறுபான்மையான புலிகள் போடும் வெற்றுச்கூச்சல்களை முழுப் புலம்பெயர் தமிழ் மக்களினதும் கருத்தாகக் காட்டி தவறான அணுகுமுறையைப் பின்பற்றுகிறது.

ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் நாட்டில் ஏற்பட்டுள்ள சகல இனவாத, மதவாதப் போக்குகளையும் அரசாங்கம் உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். அதற்கான ஒரேயொரு வழிவகை இனப்பிரச்சினைக்கான தீர்வு நடவடிக்கைகளை துணிச்சலுடனும் விரைவாகவும் எடுப்பதுதான். அதைவிடுத்து அரசாங்கம் இந்த விடயத்தில் ஏனோ தானோ என இருக்குமாக இருந்தால், சம்பந்தன் போன்றோர் வெளிநாட்டுத் தலையீடு பற்றிப் பேசி அரசை அச்சுறுத்துவதும், சம்பிக்க ரணவக்க போன்றோர் முள்ளிவாய்க்கால் அவலங்களை நினைவுறுத்தி தமிழ் மக்களை மிரட்டுவதும் தொடர்கதையாகி விடும். மீண்டும் கடந்தகாலத்தை புதுப்பிப்பது என்பது, தமிழ் மக்களாலோ அரசாங்கத்தாலோ தாங்கிக்கொள்ள முடியாதது என்பதை இருதரப்பும் பாரதூரமாகக் கவனத்தில் எடுத்துச் செயல்படுவது காலத்தின் தேவையாகும். *

13ம் பக்கத்தொடர்ச்சி...

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகள் மட்டுமின்றி சாதாரண கல்வியியலாளர்கள் போன்றவர்கள் கூட தமிழகம் சென்றால், அவர்கள் சிங்களவர்களாக இருந்தால் தாக்கப்படும் அநாகரிகமான கலாச்சாரம் ஒன்று அங்கு உருவாக்கப்பட்டு வருகிறது. அதைச் செய்பவர்கள் தமிழக மக்கள் மத்தியில் செல்லாக்காசாக இருந்துகொண்டு புலம்பெயர் புலிகளின் பணத்தில் வயிறுவளர்க்கும் சீமான், தொல்.திருமாவளவன் போன்ற சிறு கும்பல்களைச் சேர்ந்தவர்கள்தான்.

இத்தகையவர்களின் இலங்கை மக்களுக்கு எதிரான தரம்கெட்ட நடவடிக்கைகளை அண்மையில் இந்த மனோ கணேசன் நியாயப்படுத்தி இருக்கிறார். இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட்டால், தமிழகத்தில் இலங்கையர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்படும் என மனோ கணேசன் அறிக்கை விடுத்திருக்கிறார். அவர் விடுத்த ‘போர் நிறுத்த’ அறிவிப்பைப் பார்த்தால், அவர்தான் தமிழகத்தில் ஆட்களை வைத்து இலங்கயர்களுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துகிறார் என்பது போலல்லவா இருக்கிறது! சரி அவர் கூறுவது போல இலங்கையில் எங்கு தமிழர்கள் சிங்களவர்களால் தாக்கப்படுகிறார்கள் என்பதையாவது ஆதாரத்துடன் நிரூபிப்பாரா?

இலங்கையின் தமிழர் சனத்தொகையில் சுமார் 52 வீதமானவர்கள் வடக்கு கிழக்குக்கு வெளியே சிங்கள மக்கள் மத்தியில் வாழ்கிறார்கள். 1983ல் மனோ கணேசனின் ஐ.தே.க ஆட்சியிலிருந்த போது அந்த அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட மிகப்பெரிய இன வன்செயலுக்குப் பின்னர், தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராகக் குறிப்பிடக்கூடிய இன வன்செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. போர் உச்சக்கட்டத்தில் இருந்து முல்லைத்தீவு, ஆனையிறவு போன்ற மிகப்பெரிய இராணுவ முகாம்களைப் புலிகள் தகர்த்து பல நூற்றுக்கணக்கான சிங்கள இராணுவ வீரர்களைக் கொன்றுகுவித்தபோது கூட, சிங்கள மக்கள் தமக்கு மத்தியில் வாழும் தமிழ் மக்களுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்கவில்லை.

எனவே தேவையில்லாத அவதூறுக் கதைகளைப் பரப்பி தமிழகத்தின் நாலாம்தர சில்லறை அரசியல்வாதிகள் இலங்கையர்களுக்கு எதிராகத் அங்கு செய்யும் தரம்கெட்ட செயல்களை நியாயப்படுத்துகின்ற மனோ கணேசன் போன்ற இலங்கையின் நாலாந்தர அரசியல்வாதிகள் கைவிட வேண்டும். இல்லாவிடின் அவரையும் வரலாறு குப்பைக்கூடைக்குள்தான் தூக்கி வீசும். அதற்கு முன்னர் மக்களே அதைச் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. *

# பாக் நீரிணையும் கச்சதீவும்

இலங்கையின் வட பகுதிக்கும், இந்தியாவின் தென்கோடிக்கும் இடையில் அமைந்திருக்கும் நீர்ப்பரப்பே 'பாக் நீரிணை' என அழைக்கப்படுகிறது. இது 22 மைல் மட்டுமே அகலம் கொண்டது. ஆழமற்றது. எனவே கடல் எனக் குறிப்பிடப்பட முடியாதது. ஆங்கிலக் கால்வாயை விடச் சிறியது. இப்பகுதியில் பல இடங்கள் நிலத்தால் சூழப்பட்டுள்ளன. மணல் திட்டுகள், நீரோட்டம், பவளப்பாறைகள் என்பன இப்பகுதியில் நிறைந்து காணப்படுவதால், பெரிய கப்பல்கள் செல்ல முடியாது.

1755 – 1763 காலகட்டத்தில், சென்னை மாகாணத்தின் ஆளுநராக றோபேர்ட் பாக் என்பவர் இருந்தார். அவரது பெயரே இந்த நீரிணைக்குச் சூட்டப்பட்டிருக்கிறது. பாக் வளைகுடா 70 மைல் நீளமுடையது. இதன் வடக்கிலும் மேற்கிலும் இந்தியாவின் கடற்கரைகளும், தெற்கில் பாக் நீரிணை, ராமர் சேது (ஆடம் பாலம்) என்பனவும், கிழக்கில் இலங்கையும் அமைந்திருக்கின்றன. வட கிழக்குப் பகுதி வங்காள விரிகுடாக் கடலை நோக்கிச் செல்கிறது. இந்தப் பகுதி 32 மைல் அகலம் கொண்டது. பாக் வளைகுடாவில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் ஏராளமான பவளப்பாறைகள், சுரபுன்னைக் காடுகள், காயல்கள், கடற்புற்கள் என்பன இருப்பதால் மீன் உற்பத்திக்குச் சிறந்த இடமாக இருக்கின்றது. இங்கே வருடாந்தம் உற்பத்தியாகும் மீனின் தொகை 85,000 தொன்களாகும்.

பாக் நீரிணையில் அமைந்திருக்கும் 'கச்சதீவு' மிகச் சிறிய ஒரு தீவாகும். அதன் மொத்தப் பரப்பளவு 285.2 ஏக்கர். அதன் அகலம் வெறுமனே 300 அடிகள் மட்டுமே. நல்ல குடிதண்ணீரோ, பெரிய விருட்சங்களோ இத்தீவில் கிடையாது. இது நெடுந்தீவுக்குத் தெற்கே 10.5 மைல் தொலைவிலும், இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து 12 மைல் தொலைவிலும் அமைந்திருக்கிறது. இங்கு அமைந்திருக்கும் அந்தோனியார் ஆலயத்துக்கு ஒவ்வொரு வருடமும் மார்ச் மாத இறுதியில் ஒரு வாரத்துக்கு உற்சவம் நடைபெறும். அந்த உற்சவத்துக்கு இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பக்தர்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றிச் சென்று வருவர்.

இன்று இந்த கச்சதீவு இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினையின் ஆணி வேராக உருமாறி இருக்கிறது. இந்தத் தீவுக்கு இலங்கையும் இந்தியாவும் வரலாற்று அடிப்படையிலும், ஆளுமை செய்த கால அடிப்படையிலும் உரிமை கோரி வந்த போதிலும், 1974ல் அப்போதைய இலங்கை – இந்தியப் பிரதமர்களான திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க – ஸ்ரீமதி இந்திராகாந்தி ஆகியோருக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் மூலம், இத்தீவு இலங்கைக்கு சட்டப்படி சொந்தமானது.

இந்தத் தீவைச் சுற்றிலும் ஏராளமான மீன் வளம் - குறிப்பாக இறால் வகைகள் இருப்பதால், இந்திய மீனவர்கள் இங்கு தினசரி ஊடுருவுவதும், அவர்களை இலங்கைக் கடற்படையினர் விரட்டியடிப்பதும் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றது. அதனால் இந்தத் தீவை இந்தியா இலங்கையிடமிருந்து 'மீளப்பெற' வேண்டும் என்ற கோரிக்கையை, தமிழகத்தின் பெரும்பாலான கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. இப்பொழுது இப்பகுதியைச் சுற்றி எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதால், வல்லரசுகளின் 'கழுகு'க் கண்களும் இதன் மீது விழுந்துள்ளன. *

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த இந்தியர்!

இந்தியர் ஒருவர் மார்ச்20ம் திகதி பாக்குநீரிணையை நீந்திக் கடந்துள்ளார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த எஸ்.பி.முரளீதரன் என்பவரே, தலைமன்னாரிலிருந்து தமிழ் நாட்டின் தனுஸ்கோடியில் உள்ள அரிச்சமுனை வரையான 19 கடல் மைல்கள் (35 கிலோமீட்டர்) தூரத்தை, 14 மணித்தியாலங்கள் 28 நிமிட நேரத்தில் நீந்திக் கடந்துள்ளார்.

இது முரளீதரனின் இரண்டாவது முயற்சியாகும். சில வருடங்களுக்கு முன்னர் ஒருமுறை அவர் இந்த முயற்சியில் ஈடுபட்டு தோற்றிருந்தார். பாக்கு நீரிணையில் நீந்துவது அபாயமிக்க ஒன்றாகும். அந்தக் கடற்பகுதியில் பலத்த அலைகளும் சுழிகளும் இருப்பதுடன், ஏராளமான கடல் பாம்புகளும் உண்டு. இவற்றை வெற்றி கொண்டு முரளீதரன் தனது சாதனையை நிலைநாட்டியுள்ளார். அவருக்கு வழித்துணையாக இந்திய கடற்படை படகுகள் உட்பட பல தனியார் படகுகளும் சென்றன. அதில் முதலுதவிக்கான டாக்டர் ஒருவரும் சென்றார். தனது நீந்தும் முயற்சியை முடித்த பின்னர் முரளீதரன் உற்சாகமாகக் காணப்பட்டார். அவரை வரவேற்க பெருமளவு மக்கள் இந்திய தேசியக் கொடிகளுடன் கரையில் கூடி நின்றனர்.

முரளீதரன் அடுத்ததாக ஆகஸ்ட் 30ம் திகதி அமெரிக்காவிலுள்ள கற்றலினா கால்வாயை நீந்திக் கடக்கும் முயற்சியில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளார்.

பாக்குநீரிணையை 1950களில் தொண்டமானாறைச் சேர்ந்த நாராயணசாமி என்ற இலங்கையரும், 1960களில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆனந்தன் என்ற இலங்கையரும் வெற்றிகரமாக நீந்திக் கடந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
*